## மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை – 2014

---

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்பட்டனவா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

சபைக்குரிய 18 பெருந்தோட்டங்கள் தொடர்ச்சியாக நட்டம் அடைந்ததாலும் கொடுப்பனவு செய்ய வேண்டிய நியதிச்சட்ட பொறுப்புகள் அதிகரித்தமையாலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் நிகர சொத்துக்கள் ரூபா 448,930,523 வரையிலான எதிர்மறைப் பெறுமதி வரை குறைவடைந்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

இக்குறைவானது 50 சதவீதமாகும். இவ்வாறான நிலைமையில் திறைசேரியின் அல்லது அரசின் வேறெந்த நிதியுதவியுமின்றி சபையைத் தொடர்ந்து பேணுதல் நிச்சயமற்ற நிலையினதாக அவதானிக்கப்பட்டது

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

2012 ஜனவரி 01 ஆந் திகதியின் பின்னரான புதிய இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திருத்தஞ் செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17

குத்தகைக் கடன் அடிப்படையில் பெறப்பட்ட ரூபா 20,500,000 பெறுமதியான 04 லொறிகள் சம்பந்தமாக குத்தகைக் கடன் வட்டியைக் கணித்து அதனைக் கணக்கிலிடுதல் மற்றும் குத்தகைக் கடன் கொடுத்தோரை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் என்பன நியமத்திற்கேற்ப நடைபெறவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

முதலீட்டுச் சொத்துக்களை இனங்கண்டு அவற்றை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கிலிடவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், உற்பத்தி பூர்த்தியாகிய தேயிலை கையிருப்பின் பெறுமதிக் கிரயம் அல்லது தேறத்தகு நிகர பெறுமதி என்பவற்றில் எது குறைவானதோ அப் பெறுமதியிலேயே கணக்கிலிடப்பட வேண்டுமாயினும், உற்பத்தி பூர்த்தியாகிய தேயிலைக் கையிருப்பு மொத்த விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அமைவதன் காரணமாக இறுதிக் கையிருப்பு ரூபா 942,853 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் ஹோப் பெருந்தோட்டத்தின் இறுதிக் கையிருப்பை ஆரம்பக் கையிருப்பாகவும் ஆரம்பக் கையிருப்பை இறுதிக் கையிருப்பாகவும் கருதியமையால், விற்பனைக் கிரயம் மற்றும் இறுதிக் கையிருப்பு என்பன முறையே ரூபா 725,594 கூடுதலாகவும் ரூபா 362,797 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின்போது இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்பட்ட செலவினமாகிய ரூபா 1,756,528 மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், நீர் வழங்கல் செயற்திட்டம் என்பவற்றிற்கான தேய்மானம் ரூபா 633,074 குறைவாகவும் கட்டிடத் தேய்மானம் ரூபா 291,730 அதிகமாகவும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(உ) 2009 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களில் அமுலாகிய பல்வேறு பயிர்ச்செய்கைச் செயற்திட்டங்களுக்கு ஏற்பட்ட செலவினமாகிய ரூபா 615,630 தொகை, ஊழியர்களின் பொருட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்ட ஊழியர் சேமலாபநிதியம் மீதான தண்டப்பணமாகிய ரூபா 5,942,981 மற்றும் 2012 ஆம் ஆண்டில் தொழிலாளர் மனைகளைப் பழுதுபார்ப்பதற்குச் செலவழித்த ரூபா 4,136,732 என்பன குறிப்பிட்ட ஆண்டுகளுக்குரிய செலவினமாகக் இனங்காணப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருப்பதற்குப் பதிலாக பெற வேண்டிய தொகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமாகவிருந்த ஈதெல்ல தோட்டத்தின் 15 ஏக்கர் முதலீட்டுச் சபைக்கு ரூபா 30 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டு ரூபா 15 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா மில்லியனை முதலீட்டுச் சபைக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடுசெய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. காசாகப் பெறப்பட்ட தொகையை மாததிரம் மூலதன ஒதுக்கக் கணக்கில் செலவு வைத்திருந்தபோதும், சொத்து விற்பனை மூலமான இலாபம் கணிப்பிடப்பட்டு சொத்தைப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கும் சொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த கடனுக்கு ஈடுசெய்யப்பட்டமை தொடர்பாகக் கணக்கிலிடுவதற்குமான நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தது.

(எ) தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடம் ஒன்றின் பொருட்டு மீளாய்வாண்டிற்கெனப் பெற வேண்டிய ரூபா 898,896 வாடகையானது கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தனியார் கம்பனி ஒன்றினது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,106,812 விற்பனை வருமானத்தை விற்பனையாகக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக விற்பனைக் கிரயத்திலிருந்து கழித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஐ) குத்தகை அடிப்படையில் 04 லொறிகளுக்கு மீளாய்வாண்டு திசெம்பரில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 829,592 கடன் கொடுத்தோர் கணக்கில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக முற்பணக் கணக்கில் கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) ஹந்தானை பங்களாவைக் குத்தகை அடிப்படையில் வழங்கியமைக்காக 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கெனப் பெற வேண்டிய வாடகையாகிய முறையே ரூபா 249,093 மற்றும் ரூபா 447,000 என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களுக்கமைய, கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் மீதிகளை உரிய அரசாங்க நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களின் கணக்கு மீதிகளுடன் இணக்கஞ் செய்கையில் 09 நிறுவனங்களில் ரூபா 710,685 தொடக்கம் ரூபா 62,354,091 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம், எதிர்மறையான நிகர சொத்துக்கள் ரூபா 448,930,523 ஆகும். எனினும், மூலதன மாற்றக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 467,031,291 ஆனமையால் அவதானிக்கப்பட்ட வேறுபாடு 18,100,767 ஆகும்.

(இ) சபையின் தேயிலை விற்பனைத் தரகர்களிடமிருந்து பெற்ற முற்பண மீதியைத் தரகர்களது மீதிகளை உறுதிப்படுத்தும் கூற்றுடன் இணக்கஞ் செய்தபோது ரூபா 4,689,158 வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேயிலை மூலம் பெற்ற நிகர வருமானம் ரூபா 588,323,652 ஆகும். எனினும், தோட்ட மீதிக் கூட்டுத்தொகைப் பதிவேட்டின்படி நிகர

வருமானம் ரூபா 587,845,960 ஆகியமையால் தேயிலை மூலம் பெறப்பட்ட நிகர வருமானத்தில் ரூபா 477,691 வேறுபாடு நிலவியது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றிறின்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமயால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிபடுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | கட்டிடம் | 1,535,999,899 | (i) பட்டோலை<br>(ii) நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஆ) | தோட்ட நானாவிதக் கையிருப்பு | 2,931,210 | கையிருப்புக் கணிப்பு அறிக்கைகள் |
| (இ) | பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 327,170,766 | ஊழியர்களது விபரம் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையை உள்ளடக்கிய பட்டோலை |
| (ஈ) | கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடை | 310,981,245 | ஊழியர்களது பெயர்ப்பட்டியலும் கொடுப்பனவு செய்ய வேணடிய தொகையும் |
| (உ) | தரகர்களது முற்பணம் | 8,276,108 | மீதிகளை உறதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஊ) | ஊழியர் மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் | 371,000,012 | பட்டோலை |
| (எ) | அட்டுறு செலவினம் | 16,959,806 | பட்டோலை |
| (ஏ) | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 48,786,050 | பட்டோலை |
| (ஐ) | தலைமை அலுவலக வைப்புகள் | 1,108,935 | வைப்புச் சான்றிதழ் |
| (ஒ) | பெற வேண்டிய குத்தகை வாடகை | 4,378,844 | மீதிகளை உறுதிப்படுத்தல் பட்டோலை |

### 2.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகையாகிய ரூபா 37,968,476 மற்றும் 2010 முதல் 2014 வரையான காலப்பகுதியின்போது பாதுகாப்புக்கட்டணமாக 03 நிறுவனங்களிருந்து பெற வேண்டிய ரூபா 4,006,871 என்பவற்றை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) ஊழியர்களது சம்பளத்திலிருந்து சபை கழித்துக்கொண்ட ரூபா 9,693,850 குறித்த நிறுவனங்களுக்கோ அல்லது சங்கங்களுக்கோ அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கணிப்பீட்டுத் தவறின் காரணமாக 1996 ஆம் ஆண்டு முதல் பெற வேண்டிய வேதனக் கணக்கில் நிலவி வரும் ரூபா 1,351,218 மீதியை அறவிடுவதற்கோ அல்லது அதனைக் கணக்கிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) தனியார் நிறுவனமொன்றிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக 2007 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 654,756 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) இலங்கை இராணுவத்திடம் உள்ள ரூபா 538,712 வைப்பினை 2013 ஜுன் முதல் கணக்காய்வுத் தினமான 2016 சனவரி 05 வரை மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு மாதத்திற்குமான உதவு தொகை அடுத்து வரும் மாத முடிவிற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், தலைமை அலுவலகம் மற்றும் தோட்டப் பிரிவு ஊழியர் சேமலாப பங்களிப்புப் பணமான ரூபா 397,765,164 அனுப்பி வைக்கப்படவில்லை |
| (ஆ) | 1980 இன் 40 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு மாதத்திற்குமான பங்களிப்புப்பணம் அடுத்து வரும் மாத முடிவிற்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டப் பிரிவு ஊழியர்களுக்கான பங்களிப்புப்பணமான ரூபா 26,836,693 அனுப்பி வைக்கப்படவில்லை |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | சேவை முடிவுற்ற ஊழியர்களது பணிக்கொடைக் கொடுப்பனவு ஒரு மாதத்திற்குள் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் 1983 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூபா 497,985,454 கூட்டுத்தொகையான கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. |
| (ஈ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் | 2014 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 37,192,957 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (உ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதாரக் சேவைகள் கட்டண அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததும் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் பொருளாதார சேவைகள் கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும், அநேக ஆண்டுகளாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த பொருளாதார சேவைக் கட்டண மீதி ரூபா 7,752,214 ஆக இருந்தது. 2016 சனவரி 18 ஆந் திகதியளவிலும் அது கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது. |
| (ஊ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டம் | வெளி நிறுவனம் ஒன்றிடமிருந்து அறவிடப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகிய ரூபா 5,662,131 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அனுப்பி வைக்கப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>----------------------------------------------------------------- | |
| (i) | V ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகள் | சேவை விலகிய உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதும், உதவித் தோட்ட அத்தியட்சகர் ஒருவர் வேலைக்குச் சமூகமளிக்காமையால் சேவை நீங்கியதாகக் கருதப்பட்டிருக்கையில் 9 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் புதிய ஊழியராக அவர் 2013 செப்டெம்பர் மாதத்தில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். |
| (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் பிரிவு | முன்னரே தமது சேவையை முடிவுக்குக் கொண்டு வந்திருந்த உத்தியோகத்தர் ஒருவர் பின்னொரு சந்தர்பத்தில் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவதாயின், முதல் தடவையாகச் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தருக்குரிய சம்பளமே அவரது சம்பளமாக அமைய வேண்டுமெனினும், உதவித் தோட்ட அத்தியகட்சருக்கு 17 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டு அதற்குரிய சம்பளத் திட்டம் அளிக்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------------------------------- | |
| | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | செயல்நிமித்த உபகட்டு நிதியானது குறித்த பணி முடிவுற்ற உடனேயே தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், 2003 ஆம் ஆண்டு முதல் 2014 நவம்பர் 24 வரை உத்தியோகத்தர்களுக்கும் வெளி நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,857,728 கூட்டுத்தொகை மற்றும் தலைமை அலுவலகத்தில் 2006 ஆம் ஆண்டு முதல் 2014 வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 20,539,935 கூட்டுத்தொகை முற்பணமானது மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (ஐ) | 2016 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4. 4.1.1. (இ) மற்றும் 4.2.1 (அ) பந்திகள் | கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளுக்குப் புறம்பாக ரூபா 1,923,775 கிரயமுடைய 20 கணினிகள் தலைவரது அங்கீகாரத்தை மாத்திரமே பெற்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஒ) | 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கையின் 1.1 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 103(1)(ஆ), 104, 105 110 என்பன. | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு அருகதையற்ற உத்தியோகத்தர் ஒருவர் சபையின் வாகனத்தைப் பயன்படுத்தும்போது, 2012 ஏப்ரல் 05 ஆந் திகதியன்று அது விபத்துக்குள்ளாகியிருந்துடன் வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஓ) | 2010 டிசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் | நிதிக் குத்தகை அடிப்படையில் வாகனம் ஒன்றைக் |

| | | |
|---|---|---|
| | இலக்க அரசாங்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | கொள்வனவு செய்வதாயின் வரிசை அமைச்சினது செயலாளரது சிபார்சுடன் தேசிய வரவு, செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக ரூபா 20,500,000 செலவிடப்பட்டு 04 லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஔ) | 2013 சனவரி 15 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் I ஆம் பந்தி | 60 வயது பூர்த்தியாகிய உத்தியோகத்தர்களது சேவை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமாயினும், 10 தோட்டங்களில் உள்ள 40 உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி சேவையில் தொடர இடமளிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஏப்ரல் வரை அவர்களுக்கு ரூபா 32,232,419 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (க) | 2014 நவெம்பர் 22 ஆந் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபை 2014 நவம்பர் 15 தொடக்கம் அமுலுக்கு வரும் பொருட்டு 35 உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்த்ததுடன் 37 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கியுமிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி அன்று தான் வேலைக்குச் சமூகமளித்திருந்தனர் |

### 2.5 போதிய அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 ஒக்டோபர் 25 ஆந் திகதிய 13/1449/553/008-08 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மரக்குற்றிகளை விற்பனை செய்வதால் பெறும் வருமானத்தை வேறாக ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, அதனைத் திரும்பப் பெறும்போது, அரசாங்க வளங்கள் மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினது செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டபோதும், அதற்கு முரணாக அக் கணக்கிலிருந்து ரூபா 29,283,759 செலவிடப்பட்டிருந்தது. மேலும், இவ்வமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியதிச்சட்டப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமாயினும், மரக்குற்றி விற்பனை வருமானத்தின் 40 சதவீதமாகிய 12,315,000 சபையின் பொதுவான செலவுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட பற்றாக்குறை ரூபா 168,842,667 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 500,500,277 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 331,657,610 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு ரூபா 255,094,973 குறைவாக நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், மீளாய்வாண்டில் அவ்வாறாக நிதியேற்பாடு செய்யப்படாமையும் மீளாய்வாண்டிற்கான அரசாங்க மானியம் ரூபா 68,714,924 கூடுதலாக கிடைக்கப்பெற்றமையும் மேற்படி நிதிசார் விளைவுகளது அதிகரிப்பிற்கான பிரதான காரணியாகும்.

**3.2 பகுப்பாய்வுடனன நிதிசார் மீளாய்வு**

| நிதி நிலைமை | 2014 | 2013 |
| --- | --- | --- |
| நடைமுறை விகிதம் | 1:3.5 | 1:2.9 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:4.1 | 1:3.4 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிறுவனத்தின் திரவியல் மட்டம் நலிவடைந்திருந்தமை மேற்படி இரு விகிதங்களின் வாயிலாக அவதானிக்கப்பட்டதுடன், நடைமுறைப் பொறுப்புகளில் குறிப்பாக நியதிச்சட்டக் கடப்பாடு நிலவும் ரூபா 973 மில்லியனுக்கு மேற்பட்ட பொறுப்பு நிலவியதன் காரணமாக எதிர்காலத்தில் நிதி நெருக்கடி ஏற்படலாம் என அவதானிக்கப்பட்டது.

**3.3 சபைக்கு எதிராக அல்லது சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணத்தை முறையாகச் செலுத்தாமையால் தொழில் ஆணையாளர் அலுவலகம் சபைக்கெதிராக 614 வழக்குகளைத் தொடுத்திருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையின் கூட்டுத்தொகை ரூபா 247,028,977 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வெளி நபர்கள் சபைக்கு எதிராக 55 வழக்குகளைத் தொடுத்திருந்தனர்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கீழ் 16 தோட்டங்களினதும் ஒரு இறப்பர் தோட்டத்தினதும் ஒரு தென்னந்தோட்டத்தினதும் நடவடிக்கைகள் நடைபெற்றிருந்தன. மீளாய்வாண்டின்போது அத்தோட்டங்களிலிருந்து ஏற்பட்ட நட்டம் ரூபா 325,688,780 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 30 சதவீத அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டில் 16 தேயிலைத் தோட்டங்களில் ஒரு கிலோ தேயிலையினது எதிர்மறைப் பங்களிப்பு ரூபா 85 முதல் ரூபா 306 வரையிளான வீச்சில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தேயிலை ஆராய்ச்சி நிறுவக நியமங்களுக்கமைய மத்திய நாட்டுத் தேயிவை ஹெக்டயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் (பூர்த்தியடைந்த தேயிலை) ஏறக்குறைய 1,200 கிலோ கிராம் ஆகும். எனினும், சபை பராமரிக்கும் 16 தோட்டங்களில் மீளாய்வாண்டிலும் கடந்த 10 ஆண்டுகளிலும் பூர்த்தியடைந்த தேயிலை விளைச்சலைப் பரிசீலிக்கும்போது ஒரு தோட்டத்திலேனும் சராசரி விளைச்சலைப் பெறமுடியாதிருந்தமையும் பெற்ற விளைச்சல் ஒரு ஹெக்டயருக்கு 210 கிலோ கிராம் முதல் 1024 கிலோகிறாம் வரையில் அமைந்திருந்தமையும் தென்பட்டது.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலைத் தோட்டங்களது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென சிலாபத்தில் உள்ள பெருந்தோட்டக் கம்பனி ஒன்றிலிருந்து வருடாந்தம் 8 சதவீத வட்டியில் 03 வருடத்தில் செலுத்துவதான அடிப்படையில் ரூபா 40 மில்லியன் 2010 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. எனினும், சபை இக்கடன் தொகையை சம்பளம் மற்றும் படி என்பவற்றைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தியிருந்தது. அவ்வாறே, 2015 திசெம்பர் 31 வரை கடன் தொகைக்குரிய தவணைப் பணத்தையோ அல்லது வட்டியையோ செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைத்திருந்த ரூபா 9,510,464 வரி மீதியை கொடுப்பனவு செய்யவேண்டிய வரிக் கடப்பாடுகளுக்கு எதிரே எதிரீடு செய்வதற்கென உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இசைவை ஏற்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறே அதற்குரிய வரிச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவுமில்லை.

(இ) நடைபெறும் வேலையாகிய ரூபா 37,326,067 கூட்டுத்தொகையில் விலங்கியல் சொத்தாக ரூபா 5,488,627 மற்றும் நேரடியாகக் கிடைப்பதற்கற்ற பயிர்களாகிய ரூபா 31,837,440 என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. நேரடியாகக் கிடைப்பதற்கற்ற பயிர்களைப் புத்தகங்களில் பதிவழிப்பதற்குக் கணக்காய்வுத் தினமாகிய 2010 ஜுன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

சபையின் கலபொட தோட்டத்துக்குச் சொந்தமான 752 ஹெக்டயரில் 570.25 ஹெக்டயர் அங்குள்ள மூன்று மாடித் தேயிலைத் தொழிற்சாலையும் 2003 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் தினமான 2016 ஜுன் 30 வரை பயனற்றிருந்தன.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அலதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோப் தோட்டத்தால் உற்பத்தி செய்யப்படும் குடி நீர்ப் போத்தலுக்கான இலங்கை நியமங்கள் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நியமச் சான்றிதழ் காலாவதியாகியதன் பின்னர் மீண்டும் அச்சான்றிதழைப் பெறாது SLS இலச்சினையை அச்சிடுவதன் காரணமாக, நீர்ப் போத்தல்களை விநியோகிக்கும் வாடிக்கையாளர் பிரிவிற்கு 2014 ஜுலை 14 ஆந் திகதி தொடக்கம் நுகர்வோர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் தமது முத்திரையைப் பதிந்திருந்தனர். அப்பிரிவில் கடமையாற்றும் 21 பேருக்கு முத்திரையிடப்பட்ட தினத்திலிருந்து கணக்காய்வுத் தினமான 2014 செப்டம்பர் 12 ஆந் திகதி வரை எதுவித கடமையிலும் ஈடுபடாது மாதாந்தம் ரூபா 760,000 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக, எழுத்துமூல உடன்படிக்கையின்றி தேயிலைத் தரகர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணத்திற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 19,485,545 வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வங்கி மேலதிகப்பற்றின் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 8,357,703 வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொலபதன தோட்டத்தில் 106 மரங்களை விற்கையில் கொள்வனவு வழிகாட்டலின் மூலம் கூடிய கூறு விலையைச் சமர்ப்பித்த கூறுவிலைகளுக்கு அதனை வழங்காது

மரக் கூட்டுத்தாபனத்திற்கு அதனை வழங்கியமையால் ரூபா 980,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபையில் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்றிருக்கையில், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றின்மூலம் தயாரிப்பதற்கு ரூபா 94,534 செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் பணிக்கொடை என்பன குறிப்பிட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாமையால் ஆண்டின்போது தண்டப்பணமாக முறையே ரூபா 3,363,726 தொகை, ரூபா 74,593,046 மற்றும் ரூபா 9,495,305 என்பன கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது.

## 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சபையின் வளங்கள்

2009 ஏப்ரல் தொடக்கம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான டிபென்டர் வாகனம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 4.7 பதவியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியில் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 147 ஆகும். உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 170 ஆகும். இதனால் 23 ஊழியர்கள் மேலதிகமாக இருந்தனர்.

(ஆ) அறிவிக்காது சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த உதவித் தோட்ட அத்தியட்சகர் ஒருவருக்கு எதிராக தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தினது 7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2014 மார்ச் 04 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் தினமான 2014 செப்டம்பர் 30 வரை சம்பளமும் படியுமாக ரூபா 420,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரித்த பதவியணிக்குப் புறம்பாக 02 ஆலோசகர் பதவிகள் மற்றும் முகாமைத்துவ பதவி என்பவற்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் 2014 செப்டம்பரில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அந்நாள் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை ரூபா 613,000 படியாக வழங்கப்பட்டிருந்தது.

## 4.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து சபைக்குச் சேரவேண்டிய வரி நிலுவையாகிய ரூபா 34,851,028 ஐ திறைசேரியின் அங்கீகாரமின்றி கைவிடுவதற்கச் சபை இணங்கியிருந்தது. மேற்படி பெறுமதியில் குத்தகையாளர் தனிப்பட்ட ரீதியில் செலவழிக்க வேண்டிய தீர்வைக் கட்டணமாகிய ரூபா 2,885,776 மற்றும் குத்தகையாளர் நீர்க் கட்டணத்திற்கென வைப்புச் செய்து பின்னர் அவராலேயே மீளப் பெறப்பட்ட ரூபா 3,856,372 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) அரசாங்க மதிப்பீட்டு அறிக்கையைப் பெறாமல் கண்டி கொலபதன தோட்டத்தில் அமைந்துள்ள காணியில் 20 பேர்ச் தனியார் கம்பனி ஒன்றிற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகையாளர் சபையின் பெறுமதியின்றி அதனை 2 நிறுவனங்களுக்கு உப குத்தகைக்கு வழங்கியிருந்தார்.

(இ) திறந்த கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமலும் அரசாங்க மதிப்பீட்டு அறிக்கையைப் பெறாதும் கண்டி கிறேட்வெலி தோட்டத்தில் 15 பேர்ச் காணியை ரூபா 120,000 மற்றும் கேகாலை கோப்பிவத்தையில் 42.58 ஹெக்டயர் காணியை ரூபா 34,014 தொகையில் வருடாந்தக் குத்தகை அடிப்படையில் வெளி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைச் சபை 2015 திசெம்பர் 18 அன்றே சமர்ப்பித்திருந்தது. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்குகள் தொடர்ச்சியாகத் தாமதித்தே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், நிறுவனத்தில் நிலவும் சீரற்ற நிதி நிலைமை காரணமாக இத்திட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளை இடை நிறுத்தவேண்டுமென 2011 ஒக்டோபர் 07 ஆந் திகதி பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, 2012 ஆம் ஆண்டு முதல் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்குச் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) விற்பனை
(உ) பதவியணியினர் நிர்வாகம்